*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC 208/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW- 3 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.சுமதி க/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of*

***14.03.2024.***

துவக்க நேரம் 01.03

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உலிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். அ.த.சா.1 முருகேசன் எனது கணவர் ஆவார்.

2) கடந்த 06.09.2021ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் என் கணவர், எங்கள் காட்டின் அருகே ரோட்டில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபொழுது, ஆஜர் எதிரிகள் செந்தில், சத்தியமூர்த்தி(எ) பிரபு, பழனிவேல் ஆகியோர்கள் வந்து அவர்களது காட்டில் ஆடுமாடுகளை மேய்கக்கூடாது என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி, எங்களிடம் சண்டைபோட்டார்கள்.

3) மேலும் எதிரி பழனிவேல் கொடுவாளை திருப்பி அந்த கம்பியால் எனது கணவரின் தோள்பட்டையில் அடித்துவிட்டார். எதிரி சத்தியமூர்த்தி(எ) பிரபு கடப்பாரை கம்பியால் என் கணவரின் கையின் மணிக்கட்டில் அடித்து எலும்புமுறிவை ஏற்படுத்திவிட்டார். எதிரி செந்தில் குத்துக்கம்பியால் எனது பின்னந்தலையில் குத்திவிட்டார். எனது மகன் தினேஷ்-ன் கையில், இரும்புகம்பியால் எதிரிகள் மூவரும் அடித்து எலும்புமுறிவையும் ஏற்படுத்திவிட்டார்கள்.

4) பிறகு எங்களது சத்தம் கேட்டு அங்கே அருகிலிருப்பவர்கள் வந்தபொழுது எதிரிகள் மூவரும் அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை போட்டுவிட்டு என்றிருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அக்கம் பக்கம் இருப்பவர்கள் உதவியுடன் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலமாக சென்றோம். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நடந்த சம்பவம் குறித்து, எனது கணவர் புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலிசார், என்னிடமும் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எதிரிகளும், நாங்களும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது மாமியார் பெயர் இராஜம்மா என்றால் சரிதான். எதிரி பழனிவேலின், சின்னம்மா தான் இராஜம்மா என்றால் சரியல்ல. எங்கள் காட்டில் ஏன் ஆடுமேய்க்கிறீர்கள் என்று கேட்டுத்தான் எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) எங்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சிவில் வழக்கும் நிலுவையில் இல்லை என்றும், நிலம் சம்மந்தமாக எந்த முன்விரோதமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, எங்களுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே பலமுறை நிலம் சம்மந்தமாக தகராறு ஏற்பட்டுள்ளது. உண்மையில், எந்த பிரச்சனையும் இல்லை என்றும், வழக்கிற்காக பிரச்சனை இருந்ததாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3) எனது மாமியாருக்கு, நானும், எனது கணவரும் சரியாக சாப்பாடு போட்டு பராமரிக்கவில்லை என்பதால், அதுபற்றி எதிரி பழனிவேல் எனது கணவரிடம் கேட்டபொழுது சண்டை ஏற்பட்டது என்றும், அதில் பழனிவேல், அவர் மனைவி அமராவதி மற்றும் என் மாமியார் ராஜம்மாள் ஆகியோர்களுக்கு கை உடைந்துவிட்டது என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை அடித்ததாக சொல்லி எங்கள் மீது தம்மம்பட்டி போலிசார் வழக்கு பதிந்துள்ளார்கள் என்றால் அது பொய்வழக்கு.

4) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளை நாங்கள் அடித்து கையை உடைத்துவிட்டதாக ஏற்கனவே பழனிவேல்

கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரிகளின் மீது நடக்காத சம்பவத்தை சொல்லி புகாரினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள், எங்களை அடிக்கவில்லை என்றும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயுதங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.24

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.